**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை**

**O.S. 47/2020**

வாதி தரப்பு சாட்சியாகிய PW4–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஷ்கண்ணன் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | அய்யாகண்ணு | கிராமம் | : | பொதக்குடி |
| ஜாதி | : | | தொழில் | : | நகர சர்வேயர், திருவாரூர் |
| சமயம் | : | | வயது | : | 38/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. நகராட்சி ஆணையருக்காக அவரது அனுமதி கடிதத்தின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

நான் நகர சார் ஆய்வாளராக கடந்த 01.03.2026 முதல் பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்க பெற்ற அழைப்பாணையின் பேரில் கோரப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நகர அளவை எண். 574/1A என்பது TSLR பதிவேட்டின்படி நெடுஞ்சாலை என பதிவாகியுள்ளது. நகர அளவை எண்.570/1D1 என்பது TSLR பதிவேட்டின் படி நெடுஞ்சாலை என பதிவாகியுள்ளது. **(திருவாரூர் டவுன் வார்டு 3 பிளாக் 17க்கு உரிய பழைய TSLR சான்றிட்ட நகல் சா.சா.ஆ.1 ஆகவும், திருவாரூர் டவுன் வார்டு 3 பிளாக் 17க்கு உரிய ஆன்லைனில் புதுபிக்கப்பட்ட TSLR சான்றளிக்கப்பட்ட நகல் சா.சா.ஆ.2, ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** ஆன்லைன் TSLR

பதிவேட்டில் மேற்படி இரு புலஎண்களும் சர்கார் புறம்போக்கு என்றுதான் வகைபடுத்தப்பட்டுள்ளது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நகர அளவை எண். 574/1 என்பது 574/1A என எப்போது உட்பிரிவு ஏற்பட்டது என்றால் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எடுத்துவரவில்லை. அதை பார்த்தால் தான் தெரியும். மேற்படி புலஎண். 574/1A மற்றும் 570/1D1 ஆகிய புலஎண் நெடுஞ்சாலையாக கையகபடுத்தப்பட்டு நகராட்சிவசத்திலிருந்து நெடுஞ்சாலையிடம் ஒப்படைக்கபட்டதற்கான உத்தரவுகள் உண்டா என்றால் உண்டு. கைவசம் இல்லை. மேற்படி புலஎண்கள் குறித்த உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தால் இவ்வழக்கில் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2–––** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.23 18:19:01 +0530